தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

08.01.2013 A.M

## மஞ்சள் செடியில் நோய்: விவசாயிகள் கலக்கம்



பொங்கல் பண்டிகைக்காக பயிரிடப்பட்டிருந்த மஞ்சள் செடிகளில் நோய் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால் இலைகள் காய்ந்து சருகாகி வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

புத்தரிசி, கரும்பு, மஞ்சள் ஆகியவை இல்லாமல் பொங்கல் பண்டிகையே இல்லை. புதுப்பானையில் மஞ்சள் செடியைக் கட்டி புத்தரிசியிட்டு பொங்கல் வைப்பது காலம் காலமாகக் கடைபிடிக்கப்படும் தமிழர்களின் மரபு.

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பண்ருட்டி தாலுக்காவில் பல்வேறு கிராமப் பகுதியில் 50-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் விவசாயிகள் மஞ்சள் செடிகள் பயிரிட்டுள்ளனர்.

பண்ருட்டி திருவதிகை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் செடிகளில் நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. நோய் தாக்கத்தால் இலைகள் காய்ந்து சருகாகி வருகின்றன. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் வேகமாக பரவி வரும் இந்நோயால் மஞ்சள் செடிகள் பசுமையை இழந்து இலைகள் காய்ந்து சருகாகி வருவதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இது குறித்து திருவதிகை மஞ்சள் விவசாயி நாகராஜ் கூறியது: புதுச்சேரி மாநிலம் திருக்கனூர் பகுதியில் இருந்து ஒரு கிலோ விதை மஞ்சள் ரூ.40-க்கு வாங்கி வந்து விதைத்தோம். அறுவடை

சமயத்தில் நோய் தாக்கத்தால் இலைகள் காய்ந்து வருகின்றன. எந்த மருந்து அடித்தும் பயனில்லை.

கடந்த ஆண்டு புயல் தாக்கியதில் அறுவடைக்குத் தயாராக இருந்த மஞ்சள் செடிகள் சேதம் அடைந்தன. மேலும் மின் கம்பங்கள் சேதமடைந்ததால் தண்ணீர் பாய்ச்ச வசதியின்றி மஞ்சள் செடிகள் காய்ந்து போயின.

பாதிக்கப்பட்ட அனைத்துப் பயிர்களுக்கும் நஷ்ட ஈடு வழங்கிய அரசு, மஞ்சள் விவசாயிகளைப் புறக்கணித்துவிட்டது.

இம்முறையாவது, மஞ்சள் கை கொடுக்கும் என நம்பியோடு இருந்த வேளையில் திடீரென நோய் தாக்கம் ஏற்பட்டு இலைகள் காயந்து வருகின்றன.

மஞ்சள் செடிகளை வாங்க வரும் வியாபாரிகள் நோய் தாக்கிய செடிகளை பார்த்தவுடன் திரும்பி சென்று விடுகின்றனர்.

பெரும்பாலான தோட்டத்தில் நோய் தாக்கம் உள்ள நிலையில், தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் யாரும் ஆய்வுக்கு வருவதுவுமில்லை, ஆலோசனையும் வழங்கவில்லை என வேதனையுடன் தெரிவித்தார்.

### செங்கல் சூளைக்கு விறகாவதால் அழியும் பனைமரங்கள்

தென் மாவட்டங்களில் பனைமரங்களை வெட்டி செங்கல் சூளைகளுக்கு விறகுக்காக விற்பதால் இவை அழியும் தறுவாயில் உள்ளன. ஏற்கெனவே, மருத்துவ குணமிக்க வாராச்சி மரங்களையும் அந்த வகையில் வெட்டி அழித்துவிட்ட நிலையில் இப்போது பனைமரங்களுக்கு அபாயம் வரவழைக்கப்பட்டிருக்கிறது.

திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு ஏறக்குறைய அனைத்து கிராமங்களிலும் வாராச்சி எனப்படும் மருத்துவ குணமிக்க மரங்களைக் காணமுடிந்தது. வீடுகளில்கூட இந்த மரங்கள் வளர்க்கப்பட்டன.

வாதமடக்கி என்று கிராம மக்களால் இவை அழைக்கப்பட்டன. காயங்கள், புண்கள், வாய்வுப்பிடிகள் என்று பல்வேறு வகையான உடல் உபாதைகளுக்கு நல்லதொரு மருந்தாக பயன்படுத்தப்பட்ட இந்த மரங்களை இப்போது காணமுடியவில்லை.

விறகுக்காக அதிகளவில் வெட்டி எடுக்கப்பட்டதால் தற்போது விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்குகூட வாராச்சி மரங்களை பார்க்க முடியவில்லை. செங்கல்சூளைகளில் வாராச்சி மரங்களின் விறகுக் கட்டைகளை அடுக்கி, எரித்து, செங்கல்களை சுட்டு எடுத்தால் அவற்றின் நிறம் செக்கச்செவேலென்று ஜொலிக்கும். இதனால் செங்கல் சூளைகளுக்காகவும் இவ்வகை மரங்கள் வெட்டி எடுக்கப்பட்டதாகக் கிராமங்களில் சொல்கின்றனர்.

வாராச்சி மரங்கள் வழக்கொழிந்து போயிருக்கும் நிலையில், தற்போது அந்த வரிசையில் பனைமரங்களும் சேர்ந்திருக்கின்றன. தமிழரின் வாழ்வில் ஓர் அங்கமாக விளங்கிய பனைமரங்கள் இப்போது அழியும் நிலையை எட்டியிருக்கின்றன.

பனைமரத்திலிருந்து எடுக்கப்படும் பனங்கருக்கு எனப்படும் பச்சைக் குருத்து உண்பதற்கு சுவையானதும், சத்தானதுமாகும். கடும் வறட்சிக் காலங்களில் கால்நடைகளுக்குத் தீவனமாக பனை ஓலைகள் கொடுக்கப்பட்டு வந்திருக்கின்றன. பனை ஓலையில் செய்யப்பட்ட விசிறிகளில் வீசும் போது குளுமையான காற்று கிடைக்கும் சத்து மிகுதியான பனங்கிழங்கு மனிதனின் வயிற்றுப் புண்ணுக்கு மிகச்சிறந்த மருந்தாகும் என்றெல்லாம் பனைமரத்தின் பயன்பாட்டை சித்த மருத்துவர்கள் பட்டியலிட்டிருக்கிறார்கள்.

மனிதரின் உணவுத் தேவைக்கு மட்டுமில்லாமல் வீடுகள் கட்டுவதற்கும் இம்மரங்கள் துணையாக இருந்தன.

பனை மரத்திலிருந்து அறுத்து எடுக்கப்படும் பனம்பட்டையை வெயிலில் உலர்த்தி, உரித்து எடுக்கப்படும் நார் முன்பு கட்டுகள் கட்டவும், ஓலை வீடுகளை அமைக்கவும், பண்டங்கள் கட்டுப்போடவும் பயன்பட்டது. இவ்வாறு வாழ்கையின் ஓர் அங்கமாக இருந்த பனைமரம் தற்போதைய வாழ்க்கையில் அவசியமே இல்லாமல் போய்விட்டது. எத்தனை ஆண்டுகள் ஆனாலும் தண்ணீர் இல்லாமலேயே வளரும் தன்மையுடைய பனைமரத்தை காடு, தோட்டம் என வித்தியாசம் இல்லாமல் வயல் ஓரங்களிலும், வேலி ஓரங்களிலும் விவசாயிகள் வளர்த்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் ராதாபுரம், தூத்துக்குடி மாவட்டத்தில் விளாத்திகுளம், கோவில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை, அகஸ்தீஸ்வரம் வட்டங்களில் பனைமரக் காடுகள் அதிகளவில் காணப்பட்டன. இப்போது அவை அழியும் தறுவாயை எட்டியிருக்கிறது.

ஆண்டுக்கு ஒருமுறை பனைமரத்தில் வளர்ந்துள்ள ஓலைகளை வெட்டி, பட்டையை அறுத்து சுத்தம் செய்து சிரை எடுத்து விடுவதற்கு மட்டும் ஒரு மரத்துக்கு நூறு ரூபாய்க்கு மேல் செலவு செய்ய வேண்டியுள்ளது. அப்படி சிரை எடுக்காவிட்டால், மரத்தில் உள்ள பட்டைகள் எல்லாம்

வறண்டு காய்ந்து இலை தளைகள் விழுந்து பனைமரத்திலேயே தொங்குவதால் பாம்புகள் குடியிருக்க தொடங்கிவிடும் ஆபத்து உள்ளது. அணில், எலி போன்றவை கூடு கட்டிவிட்டால் அதில் இருந்து கொண்டு நிலத்தில் விளையும் தானியக் கதிர்களை வெட்டிக் கொண்டுபோய் விடும் என்பதால் பனைமரத்தில் ஓலையை வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் பனைமரங்களை வளர்க்கும் எந்த ஒரு விவசாயிக்கும் பனைமரத்தால் எந்தவித பயனும் கிடையாது என்பதால் அவற்றை வெட்டி விலைக்கு விற்க தயாராகிவிட்டார்கள் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் துணைத் தலைவர் பி. பெரும்படையார் தெரிவித்தார்.

இவ்வளவு செலவு செய்தாலும், ஐம்பது, அறுபது ஆண்டு வளர்ந்த ஒரு பனைமரத்தை வியாபாரியிடம் விற்றால் ரூ.300 முதல் ரூ. 500 வரை மட்டுமே காசு கொடுத்து வாங்கிக் கொள்கின்றனர். ஒவ்வொரு பனை மரத்துக்கும் விவசாயி செய்துள்ள செலவைக் கணக்கிட்டால் இந்த காசு எதற்கும் உதவாது என்பதால், எல்லா இடங்களிலும் உள்ள பனைமரங்களை விவசாயிகள் வெட்டி செங்கல் சூளைக்கு அனுப்பி வருகின்றனர்.

பனைமரம் ஏறும் அளவுக்கு உடல்திறன் வாய்ந்தவர்கள் இப்போது இல்லை. மேலும் பனைஏறும் தொழில் செய்வதையே புறந்தள்ளியிருக்கிறார்கள். இதுபோன்ற பல்வேறு காரணங்களாலும் பனைமரங்கள் அழிவை நோக்கியிருக்கின்றன என்று மேலும் அவர் கூறினார்.

திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு, திருக்குறுங்குடி மலையோரத்தில் பனைமரங்கள் அதிகமுள்ள பகுதிகளில் அவற்றை வெட்டி விற்றுவிட்டு அந்த நிலத்தில் வாழை உள்ளிட்ட பணப்பயிர்களை பயிரிடும் பணிகளில் விவசாயிகள் மும்முரம் காட்டியிருக்கிறார்கள். இதனால் இங்குள்ள பனைமரங்கள் வள்ளியூர், ராதாபுரம், ஆரல்வாய்மொழி சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெருமளவுள்ள செங்கல் சூளைகளுக்கு விறகுக்காக வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன.

தமிழ் இலக்கியங்களில் கற்பகவிருட்சமாக வர்ணிக்கப்படும் பனைமரங்களை அழிவிலிருந்து காக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்கள் கோரிக்கையாகும்.

ஒவ்வொரு பனை மரத்துக்கும் விவசாயி செய்துள்ள செலவைக் கணக்கிட்டால் இந்த காசு எதற்கும் உதவாது என்பதால், எல்லா இடங்களிலும் உள்ள பனைமரங்களை விவசாயிகள் வெட்டி செங்கல் சூளைக்கு அனுப்பி வருகின்றனர். பனைமரம் ஏறும் அளவுக்கு உடல்திறன் வாய்ந்தவர்கள் இப்போது இல்லை. மேலும் பனைஏறும் தொழில் செய்வதையே புறந்தள்ளியிருக்கிறார்கள். இதுபோன்ற பல்வேறு காரணங்களாலும் பனைமரங்கள் அழிவை நோக்கியிருக்கின்றன

## வடக்கு பச்சையாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும்

களக்காடு வட்டாரத்தில் விவசாயத்தைக் காப்பாற்ற, வடக்கு பச்சையாறு அணையிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என்று வலியுறுத்தி எருக்கலைப்பட்டி பெரியகுளம் பாசன விவசாயிகள் திருநெல்வேலியில் மாவட்ட ஆட்சியர் சி. சமயமூர்த்தியிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

விவசாய சங்க ஆட்சிமன்ற உறுப்பினர் வே. யாக்கோபு உள்ளிட்டோர் அளித்த அந்த மனு விவரம்: நான்குனேரி வட்டம், இடையன்குளம் கிராமத்துக்கு உள்பட்ட எருக்கலைப்பட்டி பெரியகுளம் மூலம் 200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இப்போது இங்கு 150 ஏக்கர் பரப்பளவில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எருக்கலைப்பட்டி பெரியகுளத்தில் ஒரு வார காலத்துக்குத் தேவையான தண்ணீர் மட்டுமே இருப்பில் உள்ளது.

பருவ மழையும் சரிவர பெய்யவில்லை என்பதால் பயிர்கள் போதிய தண்ணீர் இல்லாமல் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு பச்சையாறு அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டால் இந்தக் குளம் நிரம்பும். எனவே, அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்டு பயிர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரக வேலை உறுதித் திட்டம்:சங்கரன்கோவில் அருகே புளியம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தேசிய ஊரக வேலை உறுதித் திட்டப் பணியாளர்கள் ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்து அளித்த மனு: கடந்த டிசம்பர் 9 முதல் 26-ம் தேதி வரை ஊரக வேலை உறுதித் திட்டப் பணிக்குச் செல்லவில்லை.

இந்நிலையில் சில அதிகாரிகள் எங்களைப் பற்றி அவதூறாகப் பேசி வருகிறார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லாவிட்டால் ஊரக வேலை உறுதித் திட்டப் பணி அட்டைகளைத் திரும்ப ஒப்படைப்போம் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தொழிலாளர் கூட்டமைப்பு: அம்பாசமுத்திரம் வட்டம், விக்கிரமசிங்கபுரம் மதுரா கோட்ஸ் பஞ்சாலைத் தொழிலாளர் கூட்டமைப்பு சார்பில் ஆட்சியரிடம் அளிக்கப்பட்ட மனு: கூட்டமைப்பு தொழிலாளர்கள் அமைதியாகப் போராடிவரும் நிலையில் அதற்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் சில தொழிற்சங்கத்தினர் செயல்படுகிறார்கள். இதனால் எங்களது குடும்பங்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.

## விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் ரூ.25 ஆயிரம் மானியம் வழங்கக் கோரிக்கை

விவசாயத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் மானியம் வழங்க வேண்டும் என பாரதிய கிசான் சங்கம் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அனைத்து விவசாயக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டும். பயிருக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

உற்பத்தி செய்யப்பட்ட பயிருக்கு உரிய விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்டக் கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு பாரதிய கிசான் சங்கம் சார்பில் கடலூர் ஆட்சியர் அலுவலகம் எதிரே திங்கள்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு, தலைமை கோட்டப் பொறுப்பாளர்கள் திருஞானசம்மந்தம், மாவட்டத் தலைவர் லோகநாதன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாநிலப் பொதுச்செயலர் பெருமாள், மாநிலத் துணைத் தலைவர் லோகநாதன், மாநில அமைப்பாளர் கோபி ஆகியோர் தற்போதுள்ள சூழலில் 12 மணி நேர தொடர் மின் இணைப்பு, விளை நிலங்கள் விற்பனை செய்வதைத் தடுக்கும் பொருட்டு வறட்சி காலத்தில் உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்டக் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

மாவட்ட இயற்கை விவசாய சங்கத்தைச் சேர்ந்த தர்மலிங்கம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் திருமலை, மாவட்டத் துணைச் செயலர் ராஜா உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## பாசனத்துக்காக வீடுர் அணை திறப்பு

விழுப்புரம் அருகே வீடுர் அணையில் இருந்து பாசனத்துக்காக திங்கள் கிழமை முதல் 135 நாட்களுக்கு 9.75 கனஅடி வீதம் 584.90 ஏக்கர் பயன்பெறும் வகையில் மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் தண்ணீர் திறந்துவிட்டார்.

விழுப்புரம் அருகே உள்ள வீடுர் அணை மூலம் ஆண்டுதோறும் விழுப்புரம் மாவட்டத்தில் 2,500 ஏக்கரும், புதுச்சேரிப் பகுதியில் 1,000 ஏக்கரும் சேர்ந்து 3,500 ஏக்கர் பாசன வசதி பெற்று வருகிறது.

நடப்பாண்டில் பருவ மழை பொய்த்ததால், அணையில் நீர்மட்டம் குறைவாக உள்ள நிலையில், வீடுர் உள்ளிட்ட 3 கிராமங்களைச் சேர்ந்த 584.90 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் 9.75 கன அடி தண்ணீரை திங்கள் கிழமை மாவட்ட ஆட்சியர் வா. சம்பத் திறந்துவிட்டார். 7-ம் தேதி முதல் 135 நாட்களுக்கு பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படும்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் கோட்டாட்சியர் மீனா பிரியதர்ஷினி, செயற்பொறியாளர் பொ.ஜெயராம், உதவி செயற்பொறியாளர் மு. அந்தோணிதுரை, மயிலம் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் எம். ராமமூர்த்தி உள்ளிட்ட பலர் பங்

கேற்றனர்.

## விவசாயிகள் கண்டுணர் சுற்றுலா

வேளாண்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் திருநாவலூர் ஒன்றியத்தைச் சேர்ந்த 50 விவசாயிகள் கண்டுணர் சுற்றுலாவாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தச் சுற்றுலா 3 நாட்கள் நடைபெற்றது. இதில் திருச்சி, பெரியகுளம், வைகை அணை, கொடைக்கானல் ஆகிய ஊர்களில் உள்ள வேளாண் கல்லூரிகள், ஆராய்ச்சி மையங்கள், தோட்டக்கலை கல்லூரிகள் ஆகியவற்றை விவசாயிகள் நேரில் பார்வையிட்டனர்.

முன்னதாக விவசாயிகளை திருநாவலூர் வேளாண்மை உதவி இயக்குநர் தேவநாதன், அட்மா குழு தலைவர் தீபா ராஜாமணி ஆகியோர் வழியனுப்பி வைத்தனர். இதில் வேளாண் துணை அலுவலர்கள் நெடுஞ்செழியன், தொழில்நுட்ப மேலாளர் கவிதா, சிவபெருமான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## யேனம் பிராந்தியத்தில் மலர் கண்காட்சி தொடக்கம்

புதுச்சேரி மாநிலத்தின் யேனம் பிராந்தியத்தின் கலாசார விழா, மலர்க் கண்காட்சி திங்கள்கிழமை தொடங்கியது.

மேலும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை முதல்வர் என்.ரங்கசாமி தொடங்கி வைத்தார்.

யேனத்தில் 14-வது மலர் மற்றும் கனி கண்காட்சியை முதல்வர் ரங்கசாமி தொடங்கி வைத்தார். பூந்தோட்ட வளர்ப்பு மூலம் விவசாயத்துக்கு மாற்று ஏற்பாடு செய்யும் நோக்கோடு இந்த விழா நடைபெறுகிறது. இக்கண்காட்சி வரும் 8ம் தேதி வரை நடைபெறுகிறது.

புதுச்சேரி சுற்றுலாத்துறை சார்பில் ரூ.24.60 லட்சம் ஒதுக்கீட்டுடன், 11-ம் ஆண்டாக நடைபெறும் யேனம் மக்கள் கலாசார திருவிழாவையும் அவர் தொடங்கி வைத்தார்.

ஆந்திரபிரதேசம், புதுச்சேரியைச் சேர்ந்த கலைஞர்கள் இத்திருவிழாவில் பங்கேற்றனர். ஆந்திரம், புதுவை மற்றும் பிரெஞ்சு கலாசார பரிமாற்றத்தின் இணைப்பாக இந்த விழா நடைபெற்றது.

சினிமா, நாட்டுப்புற பாடல்கள், கர்நாடக இசை, நாட்டியம், கதக் போன்றவையும் நடத்தப்பட்டன.

யேனம் தொகுதி கிரியம்பேட்டாவில் எஸ்.எஸ்.ஏ. மூலம் ரூ.29.28 லட்சத்தில் கட்டப்பட்ட 4 வகுப்பறைகள் கொண்ட தொடக்கப்பள்ளி, டாக்டர் ஜாகீர் உசேன் அரசு ஆங்கில தொடக்கப்பள்ளியில் எஸ்.எஸ்.ஏ. மூலம் ரூ.35 லட்சத்தில் கட்டப்பட்ட 5 வகுப்பறைகளையும் அவர் திறந்து வைத்தார்.

மேலும், யேனம் சாவித்ரி நகரில், நகராட்சி சார்பில் மத்திய மீன்வளம் அபிவிருத்தி வாரியம் மூலம் ரூ.1.89 கோடியில் கட்டப்பட்ட சுகாதார விற்பனை அங்காடி, ரூ.89 லட்சத்தில் கட்டப்பட்ட சூரிய ஒளி உதவியால் மீன் உலர்த்தும் தளம் ஆகியவற்றையும் அவர் திறந்தார்.

யேனத்தில் ரூ.7.90 கோடியில் தாவரவியல் பூங்கா கட்டுவதற்கான பணியை அடிக்கல் நட்டுத் தொடங்கி வைத்தார். இதில் மத்திய அரசு நிதி ரூ.6.25 கோடி. மாநில அரசு நிதி ரூ.1.65 கோடி ஆகும்.

மேலும், யேனம் மருத்துவமனையில் ரூ.90 லட்சத்தில் சி.டி. ஸ்கேன் நிறுவப்பட்டு திறக்கப்பட்டது. இதன் மூலம் பெறப்படும் நோயாளிகள் தகவல்கள் இணையதளத்தின் மூலம் புதுவைக்கு அனுப்பப்பட்டு, கதிர்வீச்சு மருத்துவரின் கருத்தைப் பெற்று சிகிச்சை தர இங்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

புதுச்சேரி அரசின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நகர வளர்ச்சி முகமை சார்பில் 2010-11ம் ஆண்டில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு "ஸ்வர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா' எனும் திட்டம் மூலம் வட்டி மானியம் வழங்கும் திட்டம் யேனம் பகுதியில் தொடங்கப்பட்டிருந்தது.

ஏழை மகளிர் குழுவினர் வாங்கும் கடனுக்கான வட்டி மிகக் குறைத்து வழங்கப்பட்டது. இதன் மூலம் 462 மகளிர் குழுவைச் சேர்ந்த 4,620 பெண்கள் ரூ.1.01 கோடி வட்டி மானியத் தொகையாகக் பெற்றனர். இவற்றை முதல்வர் என்.ரங்கசாமி அளித்தார்.

அமைச்சர்கள் என்.ஜி.பன்னீர்செல்வம், பெ.ராஜவேலு, தி.தியாகராஜன், தொகுதி எம்.எல்.ஏ. மல்லாடி கிருஷ்ணாராவ் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

## உழைக்கும் நெசவாளர்களுக்கு அரசு மானியம் சென்றடைய வேண்டும்:அமைச்சர்

ஒருசில கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியே செய்யாமல் கொள்முதல் செய்யப்பட்டதாகக் கணக்கு காட்டி அரசு மானியத்தைப் பெறுகின்றனர். உண்மையாக உழைக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு மானியம் சென்றடைய வேண்டும் என கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் எஸ்.சுந்தரராஜ் பேசினார்.

தமிழ்நாடு அரசு கைத்தறி மற்றும் துணி நூல் துறை சார்பில் கைத்தறி குழுமத் திட்ட விழிப்புணர்வுக் கூட்டம் எமனேசுவரம் செப்ராஷ்ட்ரா பேரவை அரங்கில் திங்கள்கிழமை நடைபெற்றது. இதில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி அமைச்சர் பேசியதாவது:

கைத்தறி நெசவாளர்களின் முன்னேற்றத்துக்காக அவர்கள் உற்பத்தி செய்த ஆடைகள் தேக்க நிலையின்றி கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்யப்படுகிறது.

நெசவாளர்களுக்கு குறைவான கூலி வழங்கப்படுவதால் அவர்களது வாழ்க்கைத் தரத்துக்குப் போதுமானதாக இல்லை. அவர்களின் உழைப்புக்கு ஏற்ற  முறையான ஊதியம் கிடைக்கும் வகையில் 10, 11 ஆவது நிதிக்குழு மூலம் மார்ச் மாதம் 10 சதவீதமும், மே மாதம் 10 சதவீதமும் கூலி உயர்வு செய்யப்பட்டுள்ளது.

நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நலத்திட்டங்களை முதல்வர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார். முதியோர் உதவித் தொகை ரூ.500ல் இருந்து ரூ.ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. குடும்பத் தலைவர் இறப்புக்குப் பின் அவரது வாரிசுதாரருக்கு ரூ.1000-ம் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

எமனேசுவரத்தில் 88 கைத்தறி கூட்டுறவு உற்பத்தி சங்கங்கள் உள்ளன. இதில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தறிகள் உள்ளன. இந்த கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் வேலைக் கூலியில் டிரிபிள் எஸ்.திட்டத்தில் ரூ.6 கோடி சேமிப்பாக இருப்பு உள்ளது. இதன் மூலம் சங்க உறுப்பினர் பிள்ளைகளின் படிப்புச் செலவுக்கும், வீடுகள் கட்டவும், திருமணச் செலவுக்கும் வட்டி இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும் இன்சூரன்ஸ் திட்டம் மூலம் இறந்தவரின் வாரிசுக்கு ரூ.60 ஆயிரம், கோ-ஆப்டெக்ஸ் மூலம் ரூ.15 ஆயிரம் மொத்தம் ரூ.75 ஆயிரம் வழங்கப்படுகிறது.

கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் 2 மாதங்களுக்கு 100 யூனிட் மின்சாரம் இலவசமாக வழங்கப்படுகிறது.

தமிழகம் முழுவதும் கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத்துக்கு அரசு ரூ.6.57 கோடி, விசைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.217 கோடி மானியமாக வழங்கி வருகிறது.

நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் பொங்கல் பண்டிகைக்கு இலவச வேஷ்டி, சேலை உற்பத்திக்கு ரூ.350 கோடி, பள்ளி மாணவர்களின் இலவச சீருடைக்கு ரூ.269 கோடி நிதி ஒதுக்கி அத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இப்பகுதி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.25 லட்சத்தில் கிளஸ்டர் கட்டடமும், ரூ.32 லட்சத்தில் பொதுவசதி மையமும், ரூ.54.9 லட்சத்தில் நவீன வடிவமைப்பு மையமும் உருவாக்கித் தரப்படவுள்ளது.

கைத்தறி நெசவாளர்களுக்கு நிலுவையிலிருந்து ரூ.58 லட்சம் தற்போது காசோலையாக வழங்கப்பட்டுள்ளது. உற்பத்திக்கு முன்பாகவே அரசு இலவச வேஷ்டி, சேலை திட்டத்தில் சேலைக்கு ரூ.30, வேஷ்டிக்கு ரூ.50 வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு சங்கங்களின் கேட்புத் தொகை திமுக ஆட்சியில் ரூ.6.4 கோடி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதனையும் சேர்த்து இந்த அரசு கூடுதலாக ரூ.165 கோடி மானியமாக வழங்கியுள்ளது.

ஒருசில கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியே செய்யாமல் கொள்முதல் செய்யப்பட்டதாகக் கணக்கு காட்டி அரசு மானியத்தைப் பெறுகின்றனர்.

உண்மையாக உழைக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு அரசு மானியம் சென்றடைய வேண்டும்.

வரும் காலங்களில் இதுபோன்ற கூட்டுறவு சங்கங்கள் மீதும், துணைபோகும் அதிகாரிகள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதில் நகர்மன்றத் தலைவர் எம்.கீர்த்திகா, துணைத் தலைவர் ஜெய்சங்கர், நகர் செயலர் எம்.கே.ஜமால் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## விவசாயக் கிணறுகளில் சாயக்கழிவுநீர் இல்லாத தண்ணீர்

திருப்பூர் பகுதியில் சாய ஆலைகளில் இருந்து சாயக்கழிவுநீர் வெளியேற்றப்படுவதை தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், தற்போது விவசாயக் கிணறுகளில் சாயக்கழிவுநீர் இல்லாத தண்ணீர் ஊற்றெடுப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

திருப்பூர் பகுதி சாய ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் சாயக் கழிவுநீரால் நொய்யல் ஆறு, ஓடைகள், விவசாயக் கிணறுகள் மாசுபட்டுள்ளன. தற்போது, சாய ஆலைகள் உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின்படி பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைத்து சாயக் கழிவுநீரை வெளியேற்றாமல், அதை நவீன தொழில்நுட்பத்தில் சுத்திகரித்து பயன்படுத்தி வருகின்றன.

இச்செயல்பாடுகளை மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் கண்காணித்து வருகிறது. இருப்பினும், பல்வேறு பகுதிகளில் உள்ள பொதுசுத்திகரிப்பு நிலையங்களில் அங்கம் வகிக்கும் ஒரு சில சாய ஆலைகளில் இருந்து அவ்வப்போது சாயக் கழிவுநீர் நொய்யல் ஆறு, ஓடை, பள்ளம் மற்றும் திறந்த வெளியில் திறந்து விடப்படுவதால், சாயக்கழிவுநீர் கலப்பதை முற்றிலும் தடுக்க இயலாமல் உள்ளது.

சட்டத்துக்கு புறம்பாக செயல்படும் சாய ஆலைகளுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சீல் வைத்து வருகிறது. திருப்பூர் அருகே வீரபாண்டி பகுதியில் கடந்த ஆகஸ்ட் மாதம் ஒருசில சாய ஆலைகளுக்கு சீல் வைக்கப்பட்டது. அதன் பயனாக, வீரபாண்டிப் பகுதியில் தற்போது விவசாயக் கிணறுகளில் சாயக்கழிவுநீர் கலப்பு இல்லாத தண்ணீர் ஊற்றெடுத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இது குறித்து வீரபாண்டியைச் சேர்ந்த விவசாயி சந்திரசேகர் (45) கூறியது:

இப்பகுதியில் விவசாயக் கிணறுகள் சாயக் கழிவுநீரால் பாழ்பட்டு, விவசாயம் பாதிக்கப்பட்டது. வீரபாண்டி பகுதியில் கடந்த ஆகஸ்ட் மாதம் மாசுக் கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் ஒரு சில சாய ஆலைகளுக்கு சீல் வைத்தனர். இதனால் கடந்த சில மாதங்களாக சாயக் கழிவுநீர் வெளியேற்றம் தடுக்கப்பட்டது.

விவசாயக் கிணறுகளில் சாயக்கழிவுநீர் கலந்த தண்ணீரை அவ்வப்போது மோட்டார் மூலமாக வெளியேற்றினோம். கடந்த சில மாதங்களாக கிணறுகளில் சாயக் கழிவுநீர் கலப்பு இல்லாத தண்ணீர் ஊற்றெடுத்து வருகிறது. இதை விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறோம். இப்பகுதியில்

20-க்கும் மேற்பட்ட விவசாயக் கிணறுகளிலும் சாயக்கழிவுநீர் கலப்பு இல்லாத தண்ணீர் ஊற்றெடுத்துள்ளது என்றார்.

## காய்ந்த நெல் பயிருக்கு இழப்பீடு வழங்க கோரிக்கை

காய்ந்த நெல் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் வழங்கக் கோரி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தினர் அவிநாசியில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

அவிநாசி புதிய பேருந்து நிலையம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு விவசாய சங்க ஒன்றியத் தலைவர் பி.பழனிசாமி, மாவட்டத் தலைவர் பி.மோகன், ஒன்றியச் செயலாளர் எஸ்.வெங்கடாசலம், பொருளாளர் எஸ்.வேலுசாமி ஆகியோர் தலைமை வகித்தனர். விவசாய தொழிலாளர் சங்க ஒன்றியத் தலைவர் என்.சி.பழனிசாமி, பொருளாளர் பி.சாமியப்பன், துணைத் தலைவர் ஏ.முத்துரத்தினம், பொது தொழிலாளர் சங்கச் செயலாளர் ஏ.ஈஸ்வரமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிஐடியு விசைத்தறி சங்க மாவட்டச் செயலாளர் பி.முத்துசாமி சிறப்புரையாற்றினர். ஒன்றியக் குழு உறுப்பினர் பி.குமாரசாமி வரவேற்றார்.

காய்ந்த நெல் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வழங்க வேண்டும். கரும்பு டன்னுக்கு ரூ.3.500 வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வேளாண் கூட்டுறவு சங்கத்துக்கு கிடங்கு

உடுமலை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு புதிய கிடங்கு கட்ட ஞாயிற்றுக்கிழமை பூமி பூஜை நடைபெற்றது

சின்னவீரம்பட்டி ஊராட்சிக்கு உள்பட்ட பகுதியில் கட்டப்படும் இந்த புதிய கிடங்கு, 1000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்டது. அரசின் 100 சதவீத மானியத்துடன் ரூ.46.75 லட்சம் மதிப்பில் கட்டப்பட உள்ளது.

சட்டப்பேரவை துணைத் தலைவர் பொள்ளாச்சி வ.ஜெயராமன், மடத்துக்குளம் எம்எல்ஏ சி.சண்முகவேலு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். ஒன்றியக் குழுத் தலைவர் ஆர்.ராஜலட்சுமி, துணைத் தலைவர் ஆர்.ஜி.ஜெகநாதன், நகர்மன்ற துணைத் தலைவர் எம்.கண்ணாயிரம், கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் முத்துகுமார் உள்பட பலர் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணைநீர்மட்டம்

பவானிசாகர் அணை

நீர்மட்டம் 42.93 பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 42.93 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 117 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 175 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.95 டி.எம்.சி.

## விவசாயிகளுக்குப் பயிற்சி

சேத்துப்பட்டு வேளாண் துறை சார்பில் ஆத்மா திட்டம் 2012-13-ன் கீழ் விவசாயிகளுக்கு திங்கள்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

பையூரில் நடைபெற்ற இப் பயிற்சி முகாமில் சேத்துப்பட்டு பகுதி விவசாயிகள் 50 பேர் பங்கேற்றனர். பயிற்சியில், சாகுபடி செலவைக் குறைப்பது, நேரடி விதைப்பு முறையின் அவசியம், திருந்திய பயிர் சாகுபடி முறையில் துவரை நாற்று விட்டு நடும் முறையும், அதன் பருவம், ரகங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் உள்ளிட்டவை குறித்து பையூர் வேளாண் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் புத்தர் விளக்கினார்.

இம் முகாமில் உதவி வேளாண் இயக்குநர் வடமலை, வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகுமார், வட்டார தொழில்நுட்ப அலுவலர்கள் சரவணன், ராஜ்குமார், சுகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

## ரூ.35 லட்சம் பருத்தி ஏலம்,

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் ஏலமுறை விற்பனைக்கு பருத்தி வரத்து அதிகரித்துள்ளது.

இங்கு திங்கள்கிழமை ரூ.35 லட்சம் மதிப்பிலான பருத்தி ஏலம் போனது.

இந்தச் சங்கத்தின் ஆர்.கவுண்டம்பாளையம் ஏல மையத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ஆர்சிஎச் ரகம் 1104 மூட்டைகளும், டிசிஎச் ரகம் 185 மூட்டைகளும் என மொத்தம் 1269 பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு கொண்டுவரப்பட்டன.

ஆர்சிஎச் ரக பருத்தி குறைந்தபட்சமாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3,762 முதல் அதிகபட்சமாக ரூ.4,189 வரை தரத்திற்கேற்றவாறு விற்பனையானது.

டிசிஎச். ரக பருத்தி மூட்டைகள் குவிண்டாலுக்கு ரூ.4,805 முதல் ரூ.5,186 -க்கு விலைபோனது. திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் ரூ.35 லட்சத்துக்கு பருத்தி மூட்டைகள் வர்த்தகம் நடைபெற்றது.

கூடுதல் விலை வேண்டும்: இந்த சீசனில் பருத்தி வரத்து அதிகம் இருப்பினும், கடந்த சீசனைவிட பருத்தி உற்பத்தி குறைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

மேலும் ஆர்சிஎச். ரக பருத்திக்கு குவிண்டால் ஒன்றுக்கும் ரூ.5 ஆயிரமும், டிசிஎச். ரக பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ.6 ஆயிரமும் விலை கிடைத்தால்தான் விவசாயிகளுக்கு கட்டுபடியாகும் என ஏலத்தில் பங்கேற்ற பருத்தி விவசாயி சோமசுந்தரம் தெரிவித்தார்.

## குமரி மாவட்டத்தில் பரவலாக மழை

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு பரவலாக மழை பெய்தது.

மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக பனிப்பொழிவு காணப்படுகிறது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு மாவட்டத்தில் ஆங்காங்கே பரவலாக மழை செய்துள்ளது.

திங்கள்கிழமை காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் மாவட்டத்தில் அதிகபட்சமாக குளச்சலில் 76.4 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

மேலும், இரணியலில் 48.2 மி.மீ., ஆணைக்கிடங்கு 23 மி.மீ., குருந்தன்கோடு 51 மி.மீ., திருவட்டாறு 12 மி.மீ., முள்ளங்கினாவிளை 15 மி.மீ., நாகர்கோவில் 1.2 மி.மீ., பூதப்பாண்டி 17 மி.மீ., மயிலாடி 2.4 மி.மீ., மாம்பழத்துறையாறு 17.2 மி.மீ மழை பதிவாகி உள்ளது.

அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லை. எனினும் இப்போது பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 120 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 115 கன அடி தண்ணீரும் வந்து கொண்டிருக்கிறது.

பாசனத்துக்காக பேச்சிப்பாறை அணையிலிருந்து விநாடிக்கு 233 கனஅடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையிலிருந்து விநாடிக்கு 257 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு ரூ.8.06 லட்சம் மானியத்தில் வேளாண் இயந்திரங்கள்

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரமயமாக்குதலுக்காக, குமரி மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.8.06 லட்சம் மானியத்தில் வேளாண் இயந்திரங்களை ஆட்சியர் எஸ்.நாகராஜன் திங்கள்கிழமை வழங்கினார்.

இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் அவர் பேசியதாவது: வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையை ஈடுசெய்யவும், வேளாண் பணிகளை உரிய காலத்தில் முடிக்கவும், வேளாண் நிலங்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் வேளாண்மையை இயந்திரமயமாக்குதலுக்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

நிகழ் நிதிஆண்டில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கும் விவசாயிகளுக்கு, தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் ரூ. 85.60 லட்சம் மானியம் வழங்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

முதல்கட்டமாக 15 விவசாயிகளுக்கு ரூ. 17,59,196 மதிப்புள்ள இயந்திரங்கள் மற்றும் கருவிகள், ரூ.8,06,210 மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆனந்தராஜா, உதவி செயற்பொறியாளர் கோலப்பபிள்ளை, உதவிப் பொறியாளர்கள் ஜாஹீர்உசேன், பாலகிருஷ்ணன், ஞான அமிர்த ராஜா, வர்கீஸ் ஜோதிராஜ், ராதாகிருஷ்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் போஸ்லின் வின்ஸ்டன் சாம் மற்றும் வேளாண்மை இணை இயக்குநர் சையது அகமது மீரான்ஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்தை திறப்பது தொடர்பாக முத்தரப்பு ஆலோசனை கூட்டம்



ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்தை திறப்பது தொடர்பாக முத்தரப்பு ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சு.கணேஷ் தலைமையில் அரசு அதிகாரிகள், மஞ்சள் விவசாயிகள், மஞ்சள் வணிகர்கள் பங்கேற்ற முத்தரப்புக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் தரப்பில் பேசும்போது, செம்மாம்பாளையத்தில் 53 ஏக்கரில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மஞ்சள் வணிக வளாகத்தில் சட்டப்படி 5.3 ஏக்கர் பொதுஉபயோகத்துக்காக ஒதுக்கப்பட வேண்டும். அவ்வாறு ஒதுக்கினால்தான் சென்னை பெருநகர் மற்றும் ஊரகமைப்பு இயக்குநரகத்தின் அனுமதி கிடைக்கும். அங்கீகாரம் இல்லாமல் கட்டப்பட்டுள்ள இந்த வளாகத்தில் உள்ள கிடங்குகள் 2007-ம் ஆண்டு கிடங்குகள் சட்டப்படியும் கிடங்குகள் அமைக்கப்படவில்லை.

எனவே, இங்கு இருப்பு வைக்கப்படும் மஞ்சளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டால் இழப்பீடு பெற இயலாது. ஏலத்தை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தான் நடத்த வேண்டும் என்றனர்.

இதைத்தொடர்ந்து பேசிய மஞ்சள் மண்டி உரிமையாளர்கள், வணிக வளாகத்தில் 5,000 ச.அடி அரசுக்கு ஒதுக்கப்படும். ஏல மையத்தை வாடகைக்கு தருவோம் என்றனர்.

பின்னர் பேசிய அரசு அதிகாரிகள், வணிக வளாகத்தில் 50,000 ச.அடியை அரசு வழிகாட்டி மதிப்பின்படி மஞ்சள் வணிகர்கள் அரசுக்கு விலைக்கு வழங்க வேண்டும். அதேபோல ஏல மையத்தையும் அரசு வசம் ஒப்படைக்க வேண்டும். அப்படி ஒப்படைத்தால் அங்கேயே ஒருங்கிணைந்த வணிக வளாகத்தை திறக்க மாவட்ட நிர்வாகம் அரசுக்கு பரிந்துரை செய்யும் என்றனர்.

இதற்குப் பதில் அளித்த மஞ்சள் வணிகர்கள், தங்களது சங்கத்தின் பொதுக்குழுவை கூட்டி ஒரு வாரத்துக்குள் பதில் அளிப்பதாக தெரிவித்தனர்.

அரசுத் தரப்பில் ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் இரா.சுகுமார், வேளாண் இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகள் பங்கேற்றனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

08.01.2013 A.M

## அதிகம் லாபம் தரும் கொய்யா மரம் பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம்

திண்டிவனம் : கொய்யா பயிர் செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு லாபம் கிடைப்பதாக திண்டிவனம் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

திண்டிவனம் சுற்றுப்பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கொய்யா மரம் பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இது குறித்து மாமண்டூரை சேர்ந்த செல்வா என்ற விவசாயி கூறிய தாவது:

கொய்யா மரம் நடவு செய்த இரண்டு ஆண்டில் காய் காய்க்கத் துவங்கிவிடும். இந்த மரம் ஒன்றிற்கு 1 கிலோ பொட்டாஷ், டி.ஏ.பி., மற்றும் பாக்டம்பாஸ் உள்ளிட்ட உரங்கள் போடப்படுகிறது.

கொய்யா மரத்தை சப்பாத்தி பூச்சி தாக்காமல் இருக்க மருந்து அடிக்க வேண்டும். இதில் லக்கோனா ரகம் கொய்யாக் காய் ஆடி, ஆவணி, புரட்டாசி உள்ளிட்ட மாதங்களில் அதிகமாக காய்க்கும்.

காய் அறுவடையின் போது கொய்யா தோட்டத்திற்கு வந்து கொள்முதல் செய்யும் வியாபாரிகளுக்கு ஒரு கிலோ 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்யும் போது ஒரு கிலோ 30 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. இதில் விழாக்காலங்களில் ஒரு கிலோ காய் 40 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படும்.

நான் தற்போது 7 அரை ஏக்கர் பரப்பளவில் கொய்யா மரத் தோப்பு குத்தகை எடுத்து பயிர் செய்துள்ளேன்.

இந்த பரப்பளவில் ஒரு ஆண்டிற்கு 10 கிலோ எடையுள்ள பெட்டியில் 10 ஆயிரம் பெட்டி காய் அறுவடை செய்வேன். இதனால் எனக்கு ஆண்டு ஒன்றிற்கு செலவுகள் போக 4 லட்சம் ரூபாய் லாபம் கிடைக்கிறது.

கொய்யா மரத்தை சரியாக

பராமரித்தால் 12 ஆண்டுகள் வரை விடாமல் காய் காய்க்கும். கொய்யா பயிர் செய்வதன் மூலம் எப்போதும் லாபம் மட்டுமே கிடைக்கும் என்று விவசாயி செல்வா கூறினார்.

## 1,289 பருத்தி மூட்டைகள் ரூ.35 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில் நடந்த ஏலத்தில், பருத்தி, 35 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்.,) சார்பில், கவுண்டம்பாளையம் குடோனில், திங்கட்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடக்கிறது. நாமக்கல், சேலம், கொங்கணாபுரம், திருச்செங்கோடு, அவிநாசி, அன்னூர், அருப்புக்கோட்டை, விருதுநகர், ஆத்தூர், தொடாவூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், பருத்தியை ஏலம் எடுத்து, வெளிமாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர்.

பட்டணம், முத்துகாளிப்பட்டி, கைலாசம்பாளையம், வேலம்பாளையம், கதிராநல்லூர், குருசாமிபாளையம், சீராப்பள்ளி, தண்ணீர்பந்தல்காடு, ஜேடர்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், தங்கள் நிலத்தில் சாகுபடி செய்த ஆர்.சி.ஹெச்., பருத்தி, 1,104, டி.சி.ஹெச்., 185, என, மொத்தம், 1,289 மூட்டைகளை ஏலத்துக்கு கொண்டு வந்து குவித்தனர்.

அதில், பல்வேறு பகுதிகளை சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பங்கேற்றனர். ரகசிய டெண்டர் முறையில் நடக்கும் இந்த பருத்தி ஏலத்தில், அதிக விலை நிர்ணயம் செய்பவருக்கு பருத்தி வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சம், 5,186 ரூபாய்க்கும், குறைந்த பட்சம், 4,805 ரூபாய்க்கும், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சம், 4,189, குறைந்த பட்சம், 3,762 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 35 லட்சம் ரூபாய்க்கு பருத்தி விற்பனையானது.

## அதிகரிப்பு விவசாய பயிர்களை மாவு பூச்சி தாக்குதல் பனமரத்துப்பட்டி பகுதி விவசாயிகள் கவலை

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், விவசாய பயிரை நாசபடுத்திய மாவு பூச்சி மீண்டும் தலைதூக்கி உள்ளது. கொய்யா, பப்பாளி, மரவள்ளி, அவரை உள்ளிட்ட பயிர்கள், மாவு பூச்சி பிடியில் சிக்கி உள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், விவசாயம் பிரதான தொழிலாக

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு, மரவள்ளி, கொய்யா, அரளி, நெல், அவரை, குண்டுமல்லி உள்ளிட்ட பயிர் செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில், மரவள்ளி, கொய்யா, தக்காளி, பருத்தி, பப்பாளி, அவரை உள்ளிட்ட பயிர்களை மாவு பூச்சி கடுமையாக தாக்கியது. இதனால், உற்பத்தி பாதிக்கப்பட்டதால்,விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

மாவு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த முடியாததால், பள்ளித்தெருப்பட்டி, காளியாகோவில்புதூர், மல்லூர், பனமரத்துப்பட்டி, உலகரைமேடு, நத்தமேடு, பெரமனூர் உள்ளிட்ட இடங்களில் இருந்த பல ஏக்கர் கொய்யா தோப்புகளை விவசாயிகள் வெட்டி சாய்த்தனர். மாவு பூச்சியின் கோர பிடியில் சிக்கி, பப்பாளி மரம் முற்றிலும் அழிந்து போனது.

மரவள்ளி இலையின் அடிபகுதியில் முகாமிட்ட மாவு பூச்சி, பசுமை முழுவதையும் உறிஞ்சியதால், மண்ணில் இருந்த கிழங்கு வளர்ச்சி இன்றியும், மாவு சத்து அளவு குறைந்தது. மாவு பூச்சி தாக்குதலுக்கு பயந்து, மரவள்ளி பயிர் செய்வதை விவசாயிகள் கைவிட்டனர். மழை காலங்களில், மாவு பூச்சி உற்பத்தி குறைந்து காணப்பட்டதால், விவசாயிகள் நிம்மதி அடைந்தனர்.

தற்போது, மாவு பூச்சியின் தாக்குதல் தொடங்கி உள்ளது. பப்பாளி, கொய்யா, தக்காளி, அரளி செடி, மரவள்ளி, அவரை, பருத்தி உள்ளிட்ட பயிர்களில் மாவு பூச்சி தீவிரமாக பரவி வருகிறது. குறிப்பாக, அடர்த்தியாக நடவு செய்யப்பட்டுள்ள கொய்யா மரங்களில், மாவு பூச்சி அதிக அளவில் முகாமிட்டுள்ளது. கொய்யா மரம் உள்ள வயல் பகுதி முழுவதும் மாவு பூச்சி பறப்பதால் அருகே வயலில் உள்ள பயிர்களுக்கு சுலபமாக பரவி வருகிறது.

மாவு பூச்சி கை,கால்களில் பட்டால், அரிப்பு ஏற்பட்டு, அந்த இடத்தில் வீக்கம் உருவாகி விடுகிறது. ஆரம்ப நிலையில், மாவு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது குறித்து, சந்தியூர் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம் கூறியதாவது:

பகலில் வெயில் அதிகம் இருக்கும் போதும், இரவில் பனி அதிகம் கொட்டும் சமயத்தில் மாவு பூச்சி உற்பத்தி அதிகரிக்கும்.சந்தியூர் வேளாண் அறிவியல் நிலையத்தில் மாவு பூச்சியை கட்டுப்படுத்தும் ஒட்டுண்ணி இலவசமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள் ஓட்டுண்ணி வாங்கி சென்று, வயல் பகுதியில் விடுவதால், மாவு பூச்சி ஓழிக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வீடூர் அணை பாசனத்திற்கு திறப்பு

விக்கிரவாண்டி : வீடூர் அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீரை கலெக்டர் திறந்து வைத்தார்.

விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணையில் இந்த ஆண்டு மழை குறைவு காரணமாக அதன் கொள்ளவுவான 32 அடியிலிருந்து 26 அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

நேற்று வீடூர் அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. கலெக்டர் சம்பத் தலைமை தாங்கி, அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார். பின்னர் நிருபர்களிடம் கலெக்டர் சம்பத் கூறியதாவது:

தமிழக முதல்வர் ஜெ., உத்தரவின் படி இந்தாண்டு அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இந்த தண்ணீர் வீடூர், பொம்பூர், சிறுவை ஆகிய மூன்று கிராமங்களில் உள்ள 584 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது.

தண்ணீர் அணையிலிருந்து தொடர்ந்து 135 நாட்களுக்கு திறந்து விடப்படும். விவசாயிகள் தண்ணீரை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுகிறேன். இவ்வாறு கலெக்டர் சம்பத் கூறினார்.

நிகழ்ச்சியில் திண்டிவனம் ஆர்.டி.ஓ., மீனா பிரியதர்ஷினி, எம்.எல்.ஏ., நாகராஜன், ஒன்றிய சேர்மன் ராமமூர்த்தி, வேளாண்மை துறை இணை இயக்குனர் சேகர், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெயராமன் முன்னிலை வகித்தனர்.

உதவி செயற்பொறியா ளர்கள் அந்தோணி துரை, விஜயகுமார், மாவட்ட கவுன்சிலர் நடராஜன், ஊராட்சி மன்ற தலைவர் ரவி, துணை தலைவர் மணிகண்டன், அணை நீர் பாசனசங்க தலைவர் மணவாளன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கிராம விவசாயிகளுக்கு பரிசு

ஊட்டி : நீலகிரி மாவட்டம் கல்லக்கொரை கிராமத்தில், அரசின் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. நீலகிரி மாவட்டம் கல்லக்கொரை கிராமத்தில், மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் கிராமப்புற விவசாயிகளுக்கான பயிற்சியை தொடங்கி வைத்தார். இதில், 50 சதவீத மானியத்தில், 6 விசை தெளிப்பான்கள் , 40 ஆயிரத்து 800 ரூபாய் மதிப்பீட்டிலும், 2 நுண்நீர் பாசன கருவிகள் 100சதவீத மானியத்தில், 41 ஆயிரத்து 290 ரூபாய் மதிப்பீட்டிலும் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இதன்பின், பயிற்சிகள் நடந்தன.

## பண்ணை பயிற்சி

நல்லம்பள்ளி: நல்லம்பள்ளி யூனியனுக்கு உட்பட்ட தடங்கம் பஞ்சாயத்தில், வேளாண் தொழில் நுட்ப மேலாண்மை முகமை சார்பில், விவசாயிகளுக்கு பண்ணைப்பள்ளி பயிற்சி நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் அண்ணாதுரை தலைமை வகித்தார். அட்மா திட்ட வட்டார தலைவர் ராஜேஸ்வரி முன்னிலை வகித்தார். கால்நடை பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மைய உதவி பேராசிரயிர் ராஜ்குமார், உதவி மருத்துவர் ராம் குமார் ஆகியோர் கால்நடை தீவனங்கள், பால் உற்பத்தி பெருக்கத்துக்கான தீவனங்கள் சாகுபடி குறித்து விளக்கினர்.

நல்லம்பள்ளி வட்டார தொழில் நுட்ப மேலாளர் சுமதி, ஆட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு செயல் திட்டங்கள் குறித்தும் விளக்கினார்.

## பயிருக்கு இழப்பீடு கேட்டு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

விருதுநகர் : விருதுநகர் உட்பட தென் மாவட்டத்ததை வறட்சி மாவட்டமாக அரசு அறிவித்து, விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் இழப்பீடு வழங்க வேண்டும் என, விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

விருதுநகர் கலெக்டர் அலுவலகம் அருகே, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், கருகிய பயிர்களுடன் மாநில தலைவர் டாக்டர் சிவகாசி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது.

விவசாயிகள் தற்கொலை செய்வதை தடுக்க, டெல்டா மாவட்டத்தை போல் விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களை, வறட்சி மாவட்டமாக அறிவித்து, உரிய நிவாரணம், பயிர் பாதுகாப்பு இழப்பீடு வழங்க வேண்டும். கூட்டுறவு, தேசிய வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனை ரத்து செய்ய வேண்டும்.

விவசாயம் செய்ய கண்மாய்களில் டிராக்டரில் மண் எடுப்பதை தடுக்க கூடாது.

நதிநீரை தேசிய மயமாக்கி, தென் மாவட்டங்களுக்கு பாசன வசதி ஏற்படுத்தி தரவேண்டும் என்பன உட்பட வல கோரிக்கைகளுடன் , கருகிய நெல், மக்காச்சோளம், பருத்தி, உளுந்து, மல்லி செடிகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர். பொது செயலாளர் ரங்குதாஸ், மாவட்ட தலைவர் பாண்டியராஜன், பொருளாளர் முத்துராஜ் உட்பட 400க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மிளகாய் செடியில் இலை சுருட்டல்

திருப்புவனம் : திருப்புவனத்தில் மிளகாய் செடியில் இலை சுருட்டல் நோய் தாக்குதலால் விளைச்சல் பாதித்துள்ளது.திருப்புவனம் தாலுகாவில் திருப்பாச்சேத்தி, கொந்தகை, பழையனூர், பூவந்தி, ஏனாதி, வெங்கட்டியில் மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது.

தற்போது, மின்சாரமின்றி தண்ணீர் பாய்ச்சுவதில் சிரமம் உள்ளதால் வறட்சிக்கு தாக்கு பிடிக்காமல் கருகி வருகிறது. மேலும், மோட்டார் பாசனத்தில் நன்றாக விளைந்த செடியில் இலை சுருட்டல் நோய் தாக்குவதால், விளைச்சல் பெரிதும் பாதித்துள்ளது. ஏக்கருக்கு பல ஆயிரம் செலவு செய்தும் விளைச்சல் காலத்தில் நோய் தாக்குவதால் விவசாயிகள் நஷ்டம் அடைகின்றனர். முறையாக கணக்கெடுக்காத வருவாய், தோட்டக்கலைத்துறையினர், நேரில் ஆய்வு செய்யாமல் சாகுபடி நிலங்களின் கணக்கெடுப்பில் கோட்டை விடுவதாக விவசாயிகள் புகார் கூறுகின்றனர்..

## விவசாயிகளுக்கு இழப்பீடு ஒன்றியக்கூட்டத்தில் தீர்மானம்

காளையார்கோவில் : காளையார்கோவில் ஒன்றிய கூட்டத்தில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

குழுத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமையிலும்,துணைத்தலைவர் மகேஸ்வரி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முருகன், புகழேந்தி முன்னிலையிலும் நடந்தது.

கூட்ட விவாதம்:

தலைவர் ஆரோக்கியசாமி : ஒன்றிய பொதுநிதி 1.20 கோடி ரூபாய் வந்துள்ளது. தாய்திட்டத்தில் தன்னிறைவு பெறாத ஊராட்சிகளின் வளர்ச்சி பணிகளுக்கு 50 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 70 லட்ச த்திற்கு வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்படும்.

தங்கபாண்டியன் ( சுயே.,): சாத்தரசன்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்லும் நோயாளிகள் முகம் சுழிக்கும் அளவிற்கு சுகாதாரக்கேடாக உள்ளது.

காம்பவுன்ட் சுவர், கூடுதல் கட்டட வசதி ஏற்படுத்த வேண்டும்.

கண்ணன் (தி.மு.க.,): பாலையேந்தல் நாட்டார் கால்வாய் பாலம் இடிந்து 8 ஆண்டுகளாகியும் சரி செய்ய வில்லை.பஸ் வசதியில்லாமல் 30 கிராமத்தினர் அவதிப்படுகின்றனர்.

ராஜேஷ் கண்ணன் (இ.கம்யூ,.): விவசாயிகள் பயன்பெறும் வகையில் ஒன்றிய அலுவலகத்தில், மாதம் ஒரு குறைதீர் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

நிலவி வரும் குடிநீர் தட்டுப்பாட்டை சரி செய்யவும்,ரோடுகள் பராமரிக்கவும், அடிப்படை வசதிகளுக்காக மாவட்ட நிர்வாகத்திடமிருந்து கூடுதல் நிதி கேட்டு பெறவேண்டுமென கவுன்சிலர்கள் வலியுறுத்தினர்.

ஒன்றியத்தில் பல பகுதிகளில் நெல்சாகுபடி முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிப்பான விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கவும், குடிநீர் வசதிகளுக்காக அரசு கூடுதல் நிதி ஒதுக்கவேண்டுமென கவுன்சில் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு துக்க ஆண்டு

ராமநாதபுரம் : ""தமிழகத்திற்கு காவிரி தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகள் பயிர்களை காக்க முடியாமல் தற்கொலை செய்ததால், இந்தாண்டு பண்டிகை இல்லாத துக்க ஆண்டாக விவசாயிகள் அனுஷ்டிக்க வேண்டும்" என, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

ராமநாதபுரத்தில் நடந்த தேசிய உழவர் தினவிழாவில் அவர் பேசியதாவது:

மழை குறைவான பகுதிகளில் பாரம்பரிய சாகுபடி முறைகளை விவசாயிகள் கையில் எடுத்து கொள்ள வேண்டும். இயற்கை வேளாண் முறையில் உழைத்தால் வீட்டில் அனைவருக்கும் வேலை இருக்கும். சோளம், கம்பு போன்றவைகளுக்கு ரசாயண உரம் தேவையில்லை, கடன் வாங்கவும் தேவையில்லை, உழைப்பு மட்டுமே போதுமானது. ரசாயன உரத்தை பயன்

படுத்திய விவசாயிகள் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதை தவிருங்கள். யூரியா வாங்கும் பணத்தில் ஒரு ஆட்டுக்குட்டி வாங்கி விட்டால், அதன் உரம், நிலத்திற்கு வளத்தை சேர்க்கும். ரசாயண உரம் நுண்ணுயிர், மண்புழுக்களை கொன்றுவிடுவதால் நிலத்தின் வளம் பாதிக்கப்படுகிறது.

தழிழகத்திற்கு தண்ணீர் தராததால், காவிரி பிரச்னைக்காக போராடி வருகிறோம். நம்

வீட்டில் ஒருவர் இறந்தால் ஒராண்டுக்கு பொங்கல்,

தீபாவளி, கிறிஸ்துமஸ் கொண்டாடாமல் இருப்பதைபோல் இந்தாண்டு

தண்ணீரின்றி விவசாயம் பொய்த்தால்

தற்கொலை செய்த விவசாயிகளுக்காக துக்க ஆண்டாக அனுஷ்டிக்க வேண்டும், என்றார்.

## ரூ.85 லட்சம் வேளாண் பொருட்கள் வழங்கல்

வேதாரண்யம்: சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தில், 450 விவசாயிகளுக்கு முழு மானியத்தில் விவசாய கருவிகளை, எம்.எல்.ஏ., காமராஜ் வழங்கினார்.

வேதாரண்யம் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் தமிழக முதல்வரின் உத்தரவுப்படி, சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தில் கூடுதல் இனங்களாக முழுமானியத்தில் வளையும் தன்மையில்லா நீர் பாசன குழாய்களும், வளையும் தன்மையுடைய நீர் பாசன குழாய்களும், 85 லட்சம் ரூபாய் மதிப்பில், 450 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

விவசாயத்துறை அலுவலகத்தில் நடந்த விழாவுக்கு, வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரகாசன் தலைமை வகித்தார். யூனியன் துணைத்தலைவர் ஜெயபால், யூனியன் கவுன்சிலர் ராஜசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணை விவசாய அலுவலர் ராமதிலகம் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ., காமராஜ் சம்பா சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ், 85 லட்சம் ரூபாய் மதிப்பில் நீர் பாசன குழாய்களை, முழுமானியத்தில், 450 விவசாயிகளுக்கு வழங்கினார். வக்கீல் நமச்சிவாயம், ஆதனூர் பஞ்சாயத்து தலைவர் மனோகரன், விவசாய உதவி அலுவலர்கள் வேதரெத்தினம், ரவி, கந்தவேலு, எழிலரசி, இந்திரா, வட்டார தொழில்நுட்ப மேலாளர் அருள் பிரகாஷம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விளைந்துநிற்கும் சூரிய காந்திக்கு உரிய விலை கிடைக்கவேண்டும் கோவில்பட்டி பகுதி விவசாயிகள் எதிர்பார்ப்பு**

கோவில்பட்டி: கோவில்பட்டி பகுதியில் மானாவாரி பயிர்களை காப்பாற்ற முடியாமல் தவித்த விவசாயிகள் வறட்சியை தாங்கும் சூரியகாந்தியின் விளைச்சலை நம்பியுள்ளனர். அடுத்த சில வாரங்களில் விளைச்சல் கிடைத்தாலும் உரிய விலை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

கோவில்பட்டி பகுதி விவசாயம்.: கோவில்பட்டி பகுதியை சுற்றிலும் பெரும்பாலான விவசாய நிலங்கள் மானாவாரி விவசாயத்தை நம்பியே உள்ளன. ஆனால் இப்பகுதியில் ஒரு ஆண்டில் அதிகமாக மழை பெய்தும், மற்றொரு ஆண்டில் போதுமான மழை இல்லாமலும், அதற்கடுத்த ஆண்டில் மழையே பெய்யாமலும் ஏமாற்றி வருகிறது. இதன் காரணமாக கோவில்பட்டி பகுதியை பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் விவசாய தொழில் தலைகீழாக சென்று கொண்டிருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர். இந்நிலையில் இந்தாண்டு மானாவாரி விவசாய நிலங்களில் மழை வருமென நம்பி கடனை வாங்கியும், நகைகளை அடகு அல்லது விற்றும் விவசாயம் செய்தனர். ஆனால் தமிழகத்தின் பல பகுதிகளில் மழை வெள்ளம் கரைபுரண்டு ஓடிய போதும் கோவில்பட்டி பகுதியில் வானம் பார்த்த பூமியாகத்தான் இருந்தது. எனினும் ஓரிரு நாட்கள் லேசாக பெய்த தூறலில் நிலத்தில் விதைத்த விதைகள் செடிகளாக மேலே எழுந்தது. ஆனால் அச்செடிகள் வளர தொடர்ந்து மழை பெய்யாததால் முளைத்த பயிர்கள் அனைத்தும் நிலத்திலேயே கருகியது. மேலும் மழை வருமா, பயிர்கள் உயிர் பெறுமாஎன்று எண்ணிய விவசாயிகளின் கண்ணீருக்கு தற்போது வரை விடை கிடைக்க வில்லையென்கின்றனர்.

மானாவாரி பயிர்கள்.: தூத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி பகுதியில் லட்சக்கணக்கான ஏக்கர் மானாவாரி நிலங்கள் இருக்கும் நிலையில் உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம், பருத்தி, சோளம் உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்தனர். ஆனால் மழை பெய்யாததால் மானாவாரி பயிர்கள் அனைத்தும் கருகி விவசாயிகளின் வாழ்க்கையையும் இருண்ட நிலைக்கு போனது. இந்நிலையில் விவசாயிகளின் நஷ்டத்தை சற்று குறைக்க பயன்படும் ஆபத்பாந்தவானாக

இருப்பது சூரியகாந்தி பயிர்கள் தான் என்றால் மிகையாகாது. சூரியகாந்தியை பொறுத்தவரை வறட்சியிலும் வாடாமல் வளர்ந்து வரும் பயிர் என்பதால் விவசாயிகள் இதை வறட்சியை தாங்கும் பயிராக கருதுகிறார்கள். அதுமட்டுமின்றி சூரியகாந்தி வறட்சியை மட்டுமல்ல விவசாயிகளையும், அவர்களது வறுமையையும் தாங்கும் பயிர் என்று கூறுகின்றனர். இந்தாண்டு கோவில்பட்டி பகுதி விவசாயத்தில் ஏற்பட்ட பெரும் நஷ்டத்திலிருந்து தங்களை காப்பாற்றுமாறு விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதேநேரத்தில் கோவில்பட்டி கோட்டப்பகுதிகளில் ஒரு ஊருக்கு சுமார் 5 ஏக்கர் வரை சூரியகாந்தியையும் பயிர் செய்துள்ளனர்.
சூரியகாந்தி பயிர்.: வேளாண்மை துறையினர் உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம், பருத்தி, சோளம் உள்ளிட்ட பெரும்பாலான பயிர்களுக்கு வீரிய ஒட்டுரக விதைகளை கண்டுபிடித்து விட்டதாக விவசாயிகள் கூறுகின்றனர். மேலும் இதுபோன்ற வீரிய ஒட்டுரக விதைகள் 4 மாதத்தில் வளர வேண்டிய பயிர்களை வெறும் 60 முதல் 65 நாட்களிலேயே வளர்த்து மகசூல் கொடுக்க வைப்பது தான் சிறப்பு. ஆனால் சூரியகாந்தி பயிருக்கு மட்டும் அதிக விளைச்சல் கொடுக்கும் விதைகளை மட்டுமே கண்டுபிடித்து தரப்பட்டுள்ளது, மகசூல் கொடுக்கும் நாட்களை குறைக்க முடிய வில்லையென கூறுகின்றனர். இதன் வகைகளில் நவீனமாக கண்டறியப்பட்ட வீரிய ரக விதைகளாக இருந்தாலும் 4 மாதங்கள் செடியாக வளர்ந்து தான் மகசூல் கொடுக்க முடியும் என்கின்றனர். தவிர சூரியகாந்தி பயிருக்கென்று தனியாக பட்டம் எதுவும் இல்லாததால் எப்போது வேண்டுமானாலும் பயிரிட்டு மகசூல் பெற முடியும் என்கின்றனர். இதுபோன்ற சிறப்புகளை கொண்டு இருப்பதால் தான் விவசாயிகள் சூரியகாந்தி பயிரை வறட்சியை தாங்கும் பயிர் என்று குறிப்பிடுவதாக கூறுகின்றனர்.
சூரியகாந்தி விளைச்சல்.: இந்தாண்டு விவசாய தொழிலில் நிலவிய அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட நிலையில் கடந்த ஐப்பசி மாதத்தில் சூரியகாந்தி விதையிட்டுள்ளனர். இதையடுத்த காலகட்டத்தில் பலமுறை மழை வருமென வானிலை அறிக்கை செய்தி வெளியிட்ட போதும் கோவில்பட்டி பகுதியில் லேசான சாரல் மழை கூட பெய்ய வில்லை என்பதுதான் உண்மை. எனினும் சூரியகாந்தி விதைகள் முளைத்து நிலத்தை விட்டு வெளியே வந்து தற்போது பூக்கள் பூத்து ரம்மியமாக காட்சியளிக்கிறது. விவசாயிகளின் கூற்றுப்படி ஒவ்வொரு செடியும் பூக்களுடன், ஏராளமான விதைகளுடன் முளைத்து நிற்கிறது. சூரியகாந்தி பயிரை பொறுத்தவரை விதைத்த பின்னர் பராமரிப்பு என்பது தேவையற்றது. அதேநேரத்தில் சூரியகாந்தி பயிர் முளைத்து பூக்கள் வந்த பின்னர் அதன் வித்துக்களில் புழுக்கள் ஏற்படாமல் பாதுகாக்க தூய்மையான வெள்ளை துணியால் துடைத்து விட வேண்டும் என்கின்றனர். தொடர்ந்து பூக்களும், விதைகளும்

முதிர்ச்சியடைந்த பின்னர் அறுவடை செய்து வித்துக்களை பிரித்து எடுக்கும் பணிகள் நடைபெறுமென மகிழ்ச்சியாக கூறுகின்றனர். சூரியகாந்தி பயிரை பொறுத்தவரை அதை விதையிட்டு, வளர்ந்த பின்னர் பராமரித்து, வித்துக்களை பிரித்து எடுத்து கடைகளுக்கு கொண்டு சென்று காசாக்குவதே முக்கிய வேலை என்கின்றனர்.

சூரியகாந்தி விலை.: சூரியகாந்தி பயிரை வறட்சியை தாங்கும் மற்றும் விவசாயிகளை காக்கும் பயிரென கருதினாலும், அதை பயிரிட்டு அறுவடை செய்து, எண்ணெய் வித்துக்களை பிரித்து எடுத்த பின்னர் உரிய விலை கிடைக்க வில்லையெனில் அதுவும் விவசாயிகளை தாக்கும் பயிர் தான் என்று கூறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் விவசாயம் நேரெதிராக சென்று கொண்டிருக்கின்ற நிலையில் கடந்தாண்டு சூரியகாந்திக்கு சுமார் ரூ.3500 முதல் 4 ஆயிரம் வரை விலையிருந்தது. மேலும் இந்தாண்டு தற்போது வரை பெரும்பாலான இடங்களில் இதே விலை நீடிப்பதாக கூறுகின்றனர். ஆனால் கடந்தாண்டு அரிசி, காய்கறி விலைகள் இருந்தது போல் இந்தாண்டு இல்லை. மாறாக பலமடங்கு விலைவாசி ஏறிவிட்ட போதும் சூரியகாந்தியின் விலையில் மாற்றம் ஏற்படாதது ஆச்சரியம் அளிப்பதாக கூறுகின்றனர். ஆகவே மழையில்லாமல் விவசாயத்தில் ஏமாந்த விவசாயிகள் தற்போது சூரியகாந்தியை நம்பியுள்ளனர்.

இவர்களது நம்பிக்கை வீண்போகமால் இருக்க சூரியகாந்தி பயிரிருக்குரிய விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டுமென்றும், ஏற்கனவே விவசாயத்தில் ஏற்பட்ட நஷ்டத்தை சமாளிக்கு அளவிற்கு விலை நிர்ணயம் இருக்க வேண்டுமென்றும் விவசாயிகள் கோரிக்கை எழுப்பி காத்திருக்கின்றனர்.

## வேளாண்மை வல்லுனர் பேரவை பொதுக்குழு

திருநெல்வேலி:பாளை., யில் மூத்த வேளாண்மை வல்லுனர் பேரவை சிறப்பு பொதுக்குழு, குடும்ப குழுமம் நிகழ்ச்சி நடந்தது.

தலைவர் கோபாலன் தலைமை வகித்தார். மாநில பேரவை நிறுவனர் கோலப்பன், கிருஷ்ணசாமி பிள்ளை, வடிவேல் முருகன் முன்னிலை வகித்தனர். ராமகிருஷ்ணன், ராஜமுத்து, மாநில துணைத்தலைவர் முத்துதாஸ், கிளை பேரவை துணைத்தலைவர் சந்திரசேகரன், இணை செயலாளர் சூசை அந்தோணி கவுரவிக்கப்பட்டனர். பகவதிசுந்தரம், காசிவேலு உட்பட பலர் பேசினர். மனிதநேயம், தொண்டு, உடல், மனதை இளமையாக வைத்திருப்பது குறித்து விளக்கப்பட்டது.

புத்தாண்டு பரிசு வழங்கப்பட்டது.

பேரவை பொருளாளர் துரைசாமி நன்றி கூறினார்.

**200 ஏக்கரில் நெற் பயிர்கள் பாதிப்பு எருக்கலைப்பட்டி பகுதி விவசாயிகள் அவதி**

திருநெல்வேலி:போதுமான தண்ணீர் இல்லாததால் 200 ஏக்கரில் நெற் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் எருக்கலைப்பட்டி பகுதி விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

நெல்லையில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் இடையன்குளம் எருக்கலைப்பட்டி பெரிய குளம் பாசன விவசாயிகள் பலர் அளித்த மனுவில் தெரிவித்துள்ளதாவது:

எருக்கலைப்பட்டி பெரிய குளத்தில் இருந்து சுமார் 200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இதன் மூலம் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர். இக்குளத்தில் இருந்து ராமர்குளம், ஆதிச்சபேரி குளம், கோவி குளம் ஆகியவற்றிற்கும் தண்ணீர் செல்ல வேண்டியுள்ளது.

இப்பாசன பகுதிகளில் நெற் பயிர் நட்டு சுமார் 20 நாட்கள் ஆகிறது. தற்போது பயிர்கள் தண்ணீர் இன்றி கருகி காணப்படுகிறது. களக்காடு தலையணை தண்ணீர் நான்குநேரி கால்வாய்க்கு திறந்து விட்பபட்டதால் தற்போது வறட்சி ஏற்படுகிறது.

தற்போது களக்காடு வடக்கு பச்சையாற்றில் போதுமான அளவு தண்ணீர் உள்ளது. இந்த தண்ணீரை எருக்கலைப்பட்டி பெரிய குளத்திற்கு திறந்து விட்டு சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

08.01.2013 A.M

---

### கையகப்படுத்திய நிலத்துக்கு குறைவான விலை நிர்ணயம்



புதுச்சேரி : பாகூரில் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முடிவு செய்திருந்தது. இதற்காக பிரசித்தி பெற்ற பாகூர் மூலநாத சுவாமி கோயிலுக்கு சொந்தமான 6 ஏக்கர் நிலம், அதைச் சுற்றியுள்ள விவசாயிகளின் 8 ஏக்கர் நிலம் என 14 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதாக கடந்த 2002ல் அரசு அறிவித்தது. ஆனால், 11 ஆண்டுகள் ஆகியும் விளையாட்டு அரங்கப் பணிகள் நடக்கவில்லை. நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு இழப்பீடும் தரப்படவில்லை. இந்நிலையில் கையகப்படுத்தப்பட்ட விவசாய நிலத்துக்கு ஏக்கருக்கு 1 லட்சத்து 40 ஆயிரம் வழங்குவதாக 2 வாரங்களுக்கு முன்பு அரசு திடீரென அறிவித்தது.

நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ஏக்கருக்கு 1 கோடி என கூறப்படுகிறது. இதனால் விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர். கைப்பற்றிய நிலத்தை மீண்டும் ஒப்படைக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏக்கருக்கு 1 கோடி வழங்க வேண்டும் எனக் கோரி கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிடுவதாக புதுச்சேரி விவசாயிகள் சங்கம் அறிவித்து இருந்தது.
அதன்படி சாரம் ஜீவா சிலை அருகில் இருந்து ஏராளமான விவசாயிகள் ஊர்வலமாக கலெக்டர் அலுவலகம் நோக்கி நேற்று புறப்பட்டு சென்றனர். அவர்களை கோரிமேடு போலீசார், விவசாயிகளை தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

## பொங்கலுக்காக செங்கரும்பு வெட்டும் பணி மும்முரம்



சீர்காழி : நாகை மாவட்டம் சீர்காழி அருகே உள்ள அல்லிவிளாகம், செம்பதனிருப்பு, நடராஜன்பிள்ளைசாவடி, காத்திருப்பு, ராதாநல்லூர், ஆலங்காடு உள்ளிட்ட பகுதிகளில் பொங்கல் பண்டிகைக்காக விவசாயிகள் 400 ஏக்கரில் செங்கரும்பு பயிரிட்டுள்ளனர். இந்த கரும்புகள் பயிரிட்டு 10 மாதங்களை கடந்து அறுவடைக்கு தயாரானது.

கரும்புகளை வாங்க சென்னை, புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், காரைக் கால் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வந்தவண்ணம் உள்ளனர். கரும்புகளை மொத்தமாக விலைபேசி கூலி ஆட்களை நியமித்து கரும்புகளை வெட்டும் பணி தற்போது சீர்காழி பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

இது குறித்து விவசாயி சிற்றரசன் என்பவர் கூறியதாவது: "பல்வேறு சிரமங்களுக்கிடையே பயிரிடப்பட்ட கரும்பு அறுவடைக்கு தயாராக உள்ளது. பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் வராததாலும், தொடர் மின்வெட்டாலும் கரும்புக்கு உரிய நேரத்தில் தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. இதனால் கரும்புகளின் வளர்ச்சி குறைவாக உள்ளது. கரும்புகளை வாங்க வரும் வியாபாரிகள் உயரம் குறைவாக இருப்பதால் குறைந்த விலைக்கு கேட்கின்றனர்" என்றார்.

## கலெக்டர் அலுவலகங்கள் முன் விவசாயிகள் போராட்டம்



தஞ்சை : வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாயிகள் தொழிலாளர்கள் சங்கம் அறிவித்தபடி டெல்டா மாவட்டங்களில் நேற்று கலெக்டர் அலுவலகம் முற்றுகை போராட்டம் நடந்தது.
தஞ்சை கலெக்டர் அலுவலகம் முன் நடந்த போராட்டத்திற்கு தமிழ் நாடு விவசாயிகள் சங்க மாநில பொதுச்செயலாளர் சண்முகம், அகில இந்திய விவசாய தொழி லாளர் சங்க துணைத்தலைவர் திருநாவுக்கரசு ஆகியோர் தலைமை வகித்தனர். தஞ்சை கோர்ட் ரோடு ஆற்றுப்பாலம் அருகே முற்றுகை போராட்டத்தில் ஈடுபட விவசாயிகள் திரண்டனர். ஏராளமான போலீ சார் குவிக்கப்பட்டிருந்தனர்.

தடுப்பு வேலியை கடந்து போலீசாரை தள்ளிவிட்டு விவசாயிகள் கலெக்டர் அலுவலகம் நோக்கி செல்ல முயன்றனர். அப்போது பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசாருக்கும் விவசாயிகளுக்கும் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதில் எஸ்ஐ சார்லஸ்தேவி காயமடைந்தார். தடுப்பு வேலி கிரில்களை கீழே தள்ளிவிட்டதில் சில விவசாயிகளுக்கு காயம் ஏற்பட்டது.
விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் சாமி.நடராஜன் பிஆர்ஓ அலுவலக சுவற்றின் ஏறி குதித்து ஓடினார். அப்போது போலீசார் ஓடிவந்து அவரை தடுத்தனர். 2 போலீசாரும் சாமி.நடராஜனும் கீழே விழுந்து கட்டி புரண்டனர். இதில் போலீசாருக்கும் காயம் ஏற்பட்டது.

இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தை சேர்ந்த அன்பு தலைமையில் 10க்கும் மேற்பட்டவர்கள் கலெக்டர் அறை நோக்கி செல்ல முயன்றனர். போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தி வெளியில் இழுத்து வந்தனர். அப்போது அங்கேயே சாலையில் படுத்தும், அமர்ந்தும் கோஷமிட்டனர். பின்னர் கலெக்டர் பாஸ்கரன் விவசாயிகளை அழைத்து பேச்சு நடத்தி, விவசாயிகளின் கோரிக்கைகளை அரசுக்கு உடனே தெரிவிப்பதாக உறுதியளித்தார்.

நாகை: இதேபோல் நாகை, கீழ்வேளூர், கீழையூர், திருமருகல், வேதாரண்யம், தலைஞாயிறு ஆகிய ஒன்றியங்களை சேர்ந்த தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கலெக்டர் அலுவலகம் முன் நேற்று தொடர் முற்றுகை போராட்டம் நடைபெற்றது.
மயிலாடுதுறை ஆர்டிஓ அலுவலகம் முன் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க மாநில

பொது செயலாளர் மணி தலைமையில் நேற்று முற்றுகை போராட்டம் தொடங்கி நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அதே இடத்தில் சமைத்து சாப்பிட்டனர்.

திருவாரூர்: இதேபோல் திருவாரூர் கலெக்டர் அலுவலகம் முன் நடந்த முற்றுகை போராட்டத்திற்கு அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க மாநில தலைவரும், எம்எல்ஏவுமான லாசர், தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் முகமது அலி தலைமை வகித்தனர். இதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். போராட்டத்தையொட்டி கலெக்டர் அலுவலகத்தின் கேட்கள் இழுத்து மூடப்பட்டன.

.

புதுக்கோட்டை: திருவாரூர், தஞ்சை நாகை மாவட்ட டெல்டா பகுதிகளுக்கு வரும் சலுகைகளை புதுக்கோட்டை மாவட்ட டெல்டா பகுதி விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் அறந்தாங்கி ஆர்டிஓ அலுவலகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

கருகிய பயிர்களுடன் போராட்டம்

காவிரியில் போதியளவு தண்ணீர் வராததால் அதன் 17 கிளை வாய்க்கால்களிலும் தண்ணீர் இல்லை. இதனால் மேற்கண்ட வாய்க்கால்கள் பாசன பகுதிகளான 2 லட்சம் ஏக்கரிலும் சாகுபடி செய்யப்பட்டிருந்த வெற்றிலை, கரும்பு, வாழை, நெற்பயிர்கள் கருகி வருகின்றன. கருகிய நெற்பயிர், வாழைகளை எடுத்துக்கொண்டு 17 கிளை வாய்க்கால் பாசனதாரர்கள் நலச்சங்கத்தினர் நேற்று திருச்சி கலெக்டர் ஜெயஸ்ரீயை சந்தித்து முறையிட வந்தனர். சங்க நிர்வாகிகள் அனைவரும் கலெக்டரை சந்திக்க அலுவலகத்துக்குள் செல்ல முயன்றனர். அப்போது போலீசார் விவசாயிகளை கலெக்டர் அலுவலக நுழைவாயிலில் தடுத்து நிறுத்தினர்.

பிரதிநிதிகள் இரண்டு, மூன்று பேர் மட்டும் கலெக்டரை சந்திக்க செல்லுங்கள் என்றனர். அதற்கு அவர்கள் மறுத்து அனைவரும் செல்ல முயன்றனர். எனவே மெயின் கேட்டை போலீசார் இழுத்து மூடினர். இதனால் விவசாயிகள் அனை வரும் நுழைவாயில் முன் அமர்ந்து கோஷமிட்டனர்.

இன்றைய வேளாண் செய்திகள்
08.01.2013 A.M

**தென் மாவட்டத்திலும் வறட்சி: விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும் மாணிக்கம்தாகூர் எம்.பி**

திருப்பரங்குன்றம்

மழை இல்லாததால் தென் மாவட்டத்தையும் வறட்சிப்பகுதியாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க வேண்டும் என்று மாணிக்கம்தாகூர் எம்.பி. கூறினார்.

நிவாரணம் வழங்குக

திருநகரில் உள்ள விருதுநகர் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தில் மாணிக்கம் தாகூர் எம்.பி. நிருபர்களிடம் கூறியதாவது:–

டெல்டா பகுதியில் காவிரி தண்ணீர் கிடைக்காததால் விவசாயம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். இதையொட்டி அந்த பகுதி விவசாயிகளுக்கு நஷ்ட ஈடாக மானியம் வழங்கப்பட உள்ளது.

தென் மாவட்ட பகுதியிலும் மழை இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த பகுதியிலும் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர். இதை அறிந்தும் அரசு மாற்றான் தாய் போல் தென்மாவட்ட விவசாயிகளை பார்க்கிறது.

இந்த நிலையை மாற்றி தென் மாவட்டங்களை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும். மேலும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் ஒரு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்.

10–ந் தேதி ஆர்ப்பாட்டம்

ராஜஸ்தான், மராட்டியம் போல தென் மாவட்ட பகுதியிலும் 100 நாள் வேலையை 150 நாட்களாக உயர்த்த வேண்டும். இது குறித்து விளக்கம் கேட்டு மாநில அரசுக்கு கடிதம் அனுப்பினேன். ஆனால் இதுகுறித்து எந்த தகவலும் இல்லை.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 10–ந்தேதி திருமங்கலம் தாலுகா அலுவலகம் முன் மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது தெற்கு மாவட்ட தலைவர் தேவராஜ், முன்னாள் மாவட்ட தலைவர் பசுமலை ரவி, பேரையூர் பேரூராட்சி தலைவர் கே.கே.குருசாமி, திருப்பரங்குன்றம் வட்டார தலைவர் சுப்பிரமணியன், திருநகர் பேரூராட்சி முன்னாள் துணைத்தலைவர் கருப்பசாமி, நிர்வாகிகள் பொன் மகாலிங்கம், வடிவேல்கரை பிச்சை உள்பட பலர் இருந்தனர்.

## ஏப்ரல் – நவம்பர் மாத காலத்தில் ரப்பர் இறக்குமதி 32 சதவீதம் உயர்வு

கொச்சி,

நடப்பு நிதி ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் (ஏப்ரல்–நவம்பர்) ரப்பர் இறக்குமதி 32 சதவீதம் அதிகரித்து 1,53,855 டன்னாக உயர்ந்துள்ளது.

முழு நிதி ஆண்டில் இறக்குமதி சுமார் 30 சதவீதம் அதிகரித்து 2,05,050 டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவம்பர் மாதத்தில் இயற்கை ரப்பர் இறக்குமதி 22,748 டன்னாக உயர்ந்து இருந்தது. இந்நிலையில், சர்வதேச சந்தைகளில் இயற்கை ரப்பர் விலை உயர்ந்து வருகிறது. அதேசமயம், உள்நாட்டில் விலை குறைவாக உள்ளது. மேலும், மோட்டார் வாகனங்கள் விற்பனை வளர்ச்சியும் குறைந்து வருகிறது. இதுபோன்ற காரணங்களால், ஜனவரி மாதத்தில் ரப்பர் இறக்குமதி சுமார் 20,000 டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

நீண்ட கால அடிப்படையில், சர்வதேத அளவில் தேவைப்பாட்டைக் காட்டிலும் இயற்கை ரப்பர் உற்பத்தி அதிகரிக்கும். எனவே, 2013–ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டிலிருந்து சர்வதேச அளவில் விலை குறைய வாய்ப்புள்ளது.

## இந்தியாவின் அரிசி ஏற்றுமதி 70 லட்சம் டன்னாக குறையும் தாய்லாந்து முதலிடத்தை பிடிக்க வாய்ப்பு

புதுடெல்லி,

2013–ஆம் ஆண்டில் இந்தியாவின் அரிசி ஏற்றுமதி 30 சதவீதம் சரிவடைந்து 70 லட்சம் டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனையடுத்து அரிசி ஏற்றுமதியில் நம் நாடு இரண்டாவது

இடத்திற்கு செல்லும் என்றும், தாய்லாந்து முதலிடத்தை பிடிக்கும் என்றும் தற்போதைய மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

**மூன்றாவது இடம்**

2011–ஆம் ஆண்டில் அரிசி ஏற்றுமதியில் இந்தியா மூன்றாவது இடத்தில் இருந்தது. எனினும் 2012–ஆம் ஆண்டில் முதலிடத்தை பிடித்தது. அவ்வாண்டில் மொத்தம் ஒரு கோடி டன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது. அதே சமயம் முதலிடத்தில் இருந்து வந்த தாய்லாந்தின் ஏற்றுமதி குறைந்ததால் அந்நாடு இரண்டாவது இடத்திற்கு சென்றது.

உலக சந்தையில் ஓராண்டில் ஏறக்குறைய 3.50 கோடி டன் அரிசி விற்பனையாகிறது. இந்நிலையில் தாய்லாந்தின் ஏற்றுமதி நடப்பு ஆண்டில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்நாட்டில் உபரியாக 1.20 கோடி டன் அரிசி உள்ளதே இதற்கு காரணமாகும். மேலும் ஏற்றுமதி வாயிலான லாப வரம்பு குறைந்து வருவதால் இந்தியாவின் அரிசி ஏற்றுமதி குறைய வாய்ப்புள்ளது. இதனால் 70 லட்சம் டன்னுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட வாய்ப்பில்லை என வேளாண் செலவினங்கள் மற்றும் விலைகள் ஆணையத்தின் தலைவர் அசோக் குலாதி தெரிவித்தார்.

அதே சமயம் கோதுமை ஏற்றுமதி இரண்டு மடங்கு உயர்ந்து 80 லட்சம் டன்னை எட்ட வாய்ப்புள்ளதாக தெரிகிறது. 2012–ஆம் ஆண்டில் ஏறக்குறைய 40 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதியாகி உள்ளதாக தற்காலிக மதிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது. 2012 ஜனவரி–செப்டம்பர் மாத காலத்தில் 29 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**அதிக கையிருப்பு**

அளவுக்கதிகமான கையிருப்பு மற்றும் உலக சந்தையில் நல்ல விலை போன்ற காரணங்களால் நடப்பு ஆண்டில் கோதுமை ஏற்றுமதி விறுவிறுப்பாக இருக்கும் என தெரிகிறது. எனினும் இது தொடர்பாக அரசு துரித முடிவுகள் எடுக்க வேண்டும் என குலாதி மேலும் கூறினார். கடந்த இரண்டு ஆண்டுகளில் உற்பத்தி அமோக வளர்ச்சி கண்டதால் அரிசி மற்றும் கோதுமை கையிருப்பு மிகவும் அதிகரித்துள்ளது. 2011–12 பருவத்தில் (ஜூலை–ஜூன்) அரிசி உற்பத்தி 10.43 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி 9.39 கோடி டன்னாகவும் இருந்தது.